# சிறுவர் அமுதம்

19.11.94

## கிண்ணம் 5 எண்ணம் 8



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை
KINDERFREUNDLICHES MAGAZIN

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்—தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேண்டும்.
வயிரமுடைய நெஞ்சு வேண்டும்—இது
வாழும் முறைமையடி பாப்பா!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



அன்புச் சிறுமிகளே, சிறுவர்களே,

கல்வி பற்றி அறிஞர்கள் சொல்லியுள்ளவை சிலவற்றை இங்கே சொல்லப் போகின்றேன். அவற்றிலிருந்து கல்வி என்றால் என்ன என்பது பற்றி நீங்கள் அறிந்து கொள்ளப் போகின்றீர்கள்.

☐ ஒரு குழந்தை சமுதாயத்தில் பெரும்புள்ளியாக வர வேண்டும் என்று கற்பிக்காதீர்கள்! ஒரு சிறந்த மனிதனாக வரவேண்டும் என்று கற்பியுங்கள்.

☐ வாழ்க்கைக்குப் பயிற்சி பெறுவதுதான் கல்வி.

☐ நன்றாகக் கற்பிப்பதானால் எந்த விடயத்தைக் கற்பித்தாலும் எனக்குக் கவலை இல்லை.

☐ மக்கள் அறியாதவைகளைத் தெரிந்து கொள்ளச் செய்வது மட்டும் கல்வியின் பொருளல்ல! அவர்களின் நடையை மாற்றிச் செம்மையாக நடந்து கொள்ளும்படி கற்பிப்பதுதான் கல்வி.

☐ முதலாவதாக தாய்மொழியில் புரிந்து கொள்ளவும் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்பிக்க வேண்டும்.

☐ பயிற்சி இல்லாதவர்களிடம் கற்பதை விட கல்லாமல் இருப்பது மேலானது.

☐ தேசங்களுக்கு மலிவான பாதுகாப்பு கல்விதான்.

☐ கல்வி அழகே அழகு!

☐ கல்வி போல துன்பம் தீர்க்கும் மருந்து இந்த உலகில் எதுவுமில்லை!

☐ கல்வி ஒன்றே ஒன்றுதான் உலகில் அழியாத செல்வம்.

இவற்றிலிருந்து கல்வி என்பது எத்தகையது? அது எவ்வாறு அமைய வேண்டும்? என்பதை எந்த ஒரு சிறு பிள்ளையுமே விளங்கிக் கொள்ளும். விளங்கிக் கொள்ள வேண்டியவர்கள் அடம் பிடித்துக் கொண்டிருந்தால் என்ன செய்ய முடியும்?.

நீங்கள் ஒவ்வொருவரும் கற்கின்ற கல்வியானது எங்கள் மண்ணுக்கும் மக்களுக்கும் பயன்பட வேண்டியதாகும். எந்த மொழியில் கற்றாலும் அதை உங்கள் தாய் மொழிக்குக் கொண்டு வரக்கூடிய திறமையை நீங்களே வளர்த்துக் கொள்ள வேண்டும். வேறு வழி இல்லாததால்.

இங்கு தாய்மொழிக் கல்வியை முன்னெடுப்பதற்கு முன் நிற்பதாகச் சொல்லிக் கொள்ளும் எவரும் இது பற்றி அறியாதவர்கள் என்பதை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால் இன்று வரையும் மொழி பெயர்த்தல் என்பது எந்த வகுப்புப் பாடத்திட்டத்திலும் அமையவில்லை. இது இடம்பெறாமல் எப்படி உங்கள் கல்வி மண்ணுக்கும் மக்களுக்கும் பயன்படப் போகின்றது?

மொழிபெயர்க்கின்ற அளவிற்கு உங்கள் மொழித்திறனை வளர்த்துக் கொள்ளாமல் நீங்கள் கற்கின்ற அன்னிய மொழிக் கல்வி பயன்படப் போவதில்லை என்பதை மறந்துவிட வேண்டாம்!

அன்புடன்,
ஆசிரியை சிறுவர் அமுதம்

◆ கூடிய வரையில் துன்பம் வராமல் தடுத்துக் கொள்வதும், தடுக்க முடியாத துன்பத்தைக் கூடிய வரையில் சகித்துக் கொள்வதுமே புத்திசாலித்தனமாகும்.

–ரஸ்கின்–

◆ எப்பொழுதும் முன்னோக்கிச் செல்லுங்கள். முன்னேற்றத்தைப் பற்றியே சிந்தியுங்கள். இல்லையென்றால் பின்தங்கி விடுவீர்கள்.

–பெஞ்சமின் பிராங்க்ளின்–

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ரு | மை | ச | ந் | தி | க | ம | க | ள் |
| பு | க | ம | லி | ல் | ப | தை | ல | ம் | க |
| ட் | தி | க | ழு | இ | ரு | ட் | டு | ட் | தி |
| கி | ரு | ன் | அ | ரு | ந் | து | த் | ம | ச |
| ளா | மா | து | ரை | ம | து | ரை | பி | ட | தி |
| று | க | ண் | ட | ஸ் | ய | வ | கு | ச் | தெ |
| ண | ஞ் | ச | ல் | லி | வு | ல் | ப | கு | ன் |
| ர் | து | தி | ரை | வ | ஞ் | சி | ந் | த | னை |
| ளி | ம் | மை | க | ள் | ரி | வ | ளி | வி | தி |
| த | பி | அ | ணை | ளி | அ | லை | க | ல் | ப |

❋ இம்முறை இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும், மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் சொற்கள் உள்ளன. முடிவுதிகதி 10.12.94.

♦ நமது உள்ளங்கைகளில் ஒவ்வொரு சதுர அங்குலத்துக்கும் கிட்டத்தட்ட மூவாயிரம் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.



இப்படத்துக்குரிய கதையை எழுதி அனுப்புவர்க்குப் பரிசு.

சொற்களைக் கண்டு பிடியுங்களில் பரிசு பெறுகிறவர் தாருண்யா தம்பிப்பிள்ளை. இவருக்கு ராமகிருஷ்ணர் வாழ்வும் வாக்கும் பரிசளிக்கப் படுகிறது.

வினாவிடைப்போட்டியில் பங்குபற்றி சுப்பிரமணிய பாரதியார் புத்தகம் பெறுபவர் மோகன் இரத்தினசபாபதி.

ஆக்கம் எழுதியவர்களுக்கும் புத்தகங்கள் பரிசாகக் கிடைக்கின்றன.

# ஆசானாக நானிருந்தால்



ஆசானாக நான் இருந்தால்
அறிவுரைகள் கூறிடுவேன்
சின்னஞ் சிறிய பாலருக்கு
நல்ல கல்வி நான் தருவேன்



டாக்டராக நான் இருந்தால்
நாடி பிடித்துப் பார்த்திடுவேன்
ஊக்கமுடன் நோயாளிக்கு
ஊசி மருந்து ஏற்றிடுவேன்



தந்தை போலே நான் இருந்தால்
தபாற்காரன் ஆகிடுவேன்
சைக்கிள் தன்னில் சென்று நானும்
தபால் தந்தி கொடுத்திடுவேன்



வியாபாரியாய் நான் இருந்தால்
விற்றிடுவேன் பல பொருள்கள்
காய்கறிகள் விற்றிடுவேன்
கண்ணியமாய் நடந்திடுவேன்


-சமரி சிவரட்ணராஜா-
Olsberg

மனித மூளையின் பெரும்பகுதி ஐந்து வயதிற்கு முன்னரே வளர்ச்சி பெற்று விடுகின்றது. இதனாலேயே குழந்தை வளர்ப்பு முக்கியமானதாக உள்ளது.

## **ஆதவன் மாமா** எழுதுகிறேன்

"சிறுவர் அமுதம்" சஞ்சிகைக்கூடாக உங்களுடன் பேசுவதில் அளவற்ற ஆனந்தம்! மாதம் மாதம் உங்களுக்குச் சில தகவல்களை நான் படித்த புத்தகங்களிலிருந்து தொகுத்துத் தருகின்றேன். முதலில் உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ள இருப்பது **டைனோசெளரியா** (DINOSAURIER) என்னும் பிராணியைப்பற்றியது.

இப்போது பல காட்டூன் படங்களிலும், விளையாட்டுச் சாமான்களிலும் இடம்பிடித்துக்கொண்ட இந்தப் பிராணியைப் பற்றிய விபரங்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.



யுரசிக்பார்க் (Jurasic Park) என்று ஒரு திரைப்படம் டைனோசெளரியாவைப் பற்றியது. இப்படத்தை உங்களில் பலர் பாத்திருக்கக் கூடும். இப்படம் அகில உலகிலும் பிரபலமாய்க் காண்பிக்கப் படுகிறது.

உலகிலுள்ள பல நூதனசாலைகளில் டைனோசெளரியாக்களின் எலும்புக்கூடுகளைப் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். சில நூதனசாலைகளில் முழுமையான எலும்புக்கூடுகள் அதாவது அதன் உடல் எப்படி இருந்ததோ அப்படியே பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். "டைனோசெளரியா" என்ற சொல்லின் கருத்து "பயங்கர பிராணி" என்பதாகும். டைனோசெளரியாக்கள்


வெகுகாலத்திற்கு முன் பூமியில் வாழ்ந்தவை. இப்பொழு
ஒன்றுகூட உயிருடன் இல்லை.

டீனோசௌரியா என்ற பெயருடன் இரண்டு இனங்கள் உண்டு அவை **சீலோப்பிசி** (Ceolophsis), **பிளாரேயோசௌருஸ்** (Plateosauru என்பவையாகும். இவை 220 மில்லியன் வருடங்களுக் முன்னர் பூமியில் வாழ்ந்தவை. டீனோசௌரியாக்கள் வாழ் காலத்தில், அதாவது 220 மில்லியன் வருடங்களுக்கு முன்ன பூமி இப்பொழுது இருப்பதுபோல் இருக்கவில்லை. மரங்க புதர்கள், நிலப்பரப்புகள் எல்லாமே வித்தியாசமாய் இருந்த



பெரும்பாலான டைனோசௌரியாக்கள் மிகவும் பெரியவை உதாரணமாக **அபாரொசௌருஸ்** (Apatosaurus) 21 மீற்றர் நீளமாக இருந்தது. இது இப்போது இருந்தால் நான்காவது மாடி யன்னலில் தொங்கவிட்டிருக்கும் பூச்செடியைத் தின்று விடும். அவ்வளவு உயரம்! ஏனைய டைனோசௌரியாக்கள் சற்றுச் சிறியவை, சிறியவை என்றால் ஒரு யானையைப்போல! ஒன்றிரண்டு டைனோசௌரியாக்கள் ஒரு தீக்கோழியின் அளவு சிறியவை. அவற்றை **கொம்சொநாதஸ்** (Compsognathus) என்று அழைத்தார்கள். **முசாரஸ்** (Mussarus) என்று சொல்லப்பட்டவையும் சிறியவையே.

விஞ்ஞானிகள் நீண்ட காலமாக **பிறக்கியோசௌருஸ்** (Brachiosaurus) என்பதுதான் மிகப்பெரியது என்று நம்பி வந்தனர். அது 19–20 மீட்டர் நீளமாகவும் 70–80 தொன் பாரமாகவும் இருந்தது. ஆனால், 1979ம் ஆண்டு விஞ்ஞானிகளால் கண்டெடுக்கப்பட்டது, அதை வைத்துக் கொண்டு இன்னும் பென்னம் பெரிய டைனோசௌரியாக்கள் இருந்திருக்கின்றன எனச் சொல்கிறார்கள். அவற்றை **சூப்பர்சௌருஸ்** (Supersaurus) என்று அழைக்கிறார்கள். அவை 27–30 மீற்றர் நீளமாகவும் 120–130 தொன் பாரமாகவும் இருந்தன. அதாவது 25 யானைகளின் பலம்.





Brachiosaurus

சரி, சிறார்களே அடுத்த இதழில் டைனோசௌரியாக்களை எப்படிக் கண்டு பிடித்தார்கள்? 220 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட எலும்புத்துண்டுகளை எப்படிப் பாதுகாத்தார்கள்? என்பது பற்றியும் டைனோசௌரியாக்களின் வாழ்க்கை எப்படி இருந்தது என்பது பற்றியும் எழுதுகிறேன்.

"ஆதவன் மாமா" எழுதும் இந்த விஷயங்கள் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? அல்லது ஏதாவது சந்தேகங்கள், வினாக்கள் இருக்கிறதா? இருந்தால் நீங்கள் சிறுவர் அமுதத்திற்கு எழுதுங்கள். நான் பதில் அளிக்கக் காத்திருக்கிறேன்.

மேலே நான் எழுதிய விஷயங்கள் All about dinosaurs என்ற ஆங்கில நூலிலிருந்து பெற்றுக்கொண்டவை.

இப்படிக்கு
ஆதவன் மாமா

- பிரித்தானியா 8000 ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவின் நிலப்பகுதியுடன் இணைந்திருந்தது.

- பழைய ஏற்பாடுதான் யூதர்களின் வேதமாகும் அவர்கள் புதிய ஏற்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை..

- ஆபிரிக்காவில் முதன் முதலாகக் குடியேற்றம் ஏற்படுத்திய ஐரோப்பியர் பெல்ஜியம் நாட்டவரே.

# சிந்தனை

எப்போது
வருத்தமாக இருக்கிறோமோ
அப்போது
இரண்டு விஷயம்தான் சிந்திக்க வருகிறது
ஒன்று மாண்டு விடுவோமா?
பிழைத்து விடுவோமா?



பிழைத்து விட்டால்
ஒன்றும் சிந்திக்கத் தேவையில்லை
இறந்து விட்டால்
இரண்டு விஷயம்தான் சிந்திக்க இருக்கிறது
ஒன்று நரகத்திற்குப் போவோமா?
இல்லை சொர்க்கத்திற்கு போவோமா?

சொர்க்கத்திற்குப் போய்விட்டால்
ஒன்றும் சிந்திக்கத் தேவையில்லை
நரகத்திற்குப் போய்விட்டால்
இரண்டு விஷயம்தான் சிந்திக்க இருக்கிறது
ஒன்று புண்ணியம் செய்தோமா?
இல்லை பாவம் செய்தோமா?



சிந்தனைக்கே இடமில்லை
நாம் தேவராகப் பிறந்து விட்டால்.

சுதா (Denemark)





# சார்லி சாப்ளின்




யூனிவேசல் பட நிறுவனத்தினரின் இழுபறித் தனத்தினால் ஒப்பந்தம் முறிந்ததால் குழம்பிப் போயிருந்த சார்லிக்கு அதிஷ்டம் வேறு வழியாக அழைத்தது. சார்லியின் நடிப்புத் திறமையையும் புகழையும் அறிந்த எஸ்ஸென்னே படநிறுவனத்தினர் சார்லியோடு தொடர்பு கொண்டனர். அவர்களின் பிரதிநிதியான ஜெஸ் ரொபின்ஸ் அவசரமாகச் சார்லியைச் சந்தித்தார். யூனிவேசல் நிறுவனத்தாரிடம் சார்லிக்கு ஏற்பட்ட ஒப்பந்த முறிவைப் பற்றி சரியான விளக்கங்களைக் கேட்டறிய விரும்பினார்.

ஒப்பந்தத் தொடக்கத்தில் பத்தாயிரம் டொலர்கள் முன்பணமாகத் தர வேண்டும் என்றும், வாரத்திற்கு ஆயிரத்து இருநூற்றைம்பது டொலர் சம்பளமாகத் தரவேண்டுமென்றும் சார்லி கேட்டதாகவும், அதனாலே தான் ஒப்பந்தத்தில் முறிவு ஏற்பட்டதாகத் தாங்கள்

அறிந்ததாக ஜெஸ் ரொபின்ஸ் சார்லியிடம் கூறினார். சார்லி திகைத்துப் போய் விட்டார். அப்பொய்யான தகவலை யார் பரப்பியிருப்பார்கள் என்று அவருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

எஸ்ஸெனே நிறுவனத்தின் தூதுவராகவே ஜெஸ் ரொபின்ஸ் வந்திருக்கிறார் என்பதை அவருக்களித்த இரவு விருந்தின் போது சார்லி அறிந்து கொண்டார். நிறுவனத்தின் தலைவரான ஆன்டர்ஸன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவே தம் பிரதிநிதியாக ஜெஸ்ரொபின்ஸை அனுப்பியிருக்கிறார் என்றும் அறிந்தார். ஜெஸ்ரொபின்ஸ் ஒரு வாரத்துக்கு ஆயிரத்து இருநூற்றிஐம்பது டொலர் தருவதாக உறுதிப் படுத்தினார்.

முன்பணத்தைப் பற்றிய பேச்சையே ஜெஸ் ரொபின்ஸ் நினைக்காதவர் போலப் பேசிக் கொண்டிருந்தார். சார்லியோ தனக்குத் திருப்தி இல்லாததை நேரடியாகவே கூறினார். முன்பண விடயத்தில் சார்லியோ பிடிவாதமாக இருந்தார். சார்லி பிடிவாதமாக இருப்பதை உணர்ந்த ஜெஸ்ரொபின்ஸ் அங்கிருந்து கொண்டே ஆன்டர்ஸனிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். பின் சார்லிடம் முன் பணம் தருவதென்பது உறுதியாகி விட்டது. மற்ற




Moderne Zeiten படத்தில்


City Lights படத்தில்

விடயங்களை நாளைக்குப் பேசிக் கொள்வோம் என்று கூறி விடை பெற்றுக் கொண்டார்.

அடுத்த நாளை மிகவும் ஆவலுடன் வரவேற்றார் சார்லி. குறிப்பிட்ட நேரத்துக்கு ஜெஸ்ரொபின்ஸ் வந்தார். சார்லியின் கையில் அறுநூறு டொலருக்கான காசோலையைக் கொடுத்தார். வாங்க மறுத்த சார்லியிடம் நாளை ஆன்டர்ஸன் உங்களை நேரடியாகச் சந்திப்பார். இத்தொகையை இப்பொழுது பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார். சார்லியும் மறுக்க முடியாமல் தொகையைப் பெற்றுக் கொண்டார்.

மறுநாளும் வந்தது. ஜெஸ் ரொபின்ஸ் சொல்லியபடியே ஆன்டர்ஸன் வந்தார். சார்லி மிகக் குதூகலத்துடன் அவரை வரவேற்றார்.

(தொடரும்)

# கனவு

உறக்கத்தில் வரும் கனவுகள் எப்படித் தோன்றுகின்றன? கனவு என்றால் என்ன? என்பது யாருக்குமே தெரியாத ஒரு புதிர். தூக்கத்துக்கும் தூக்கத்தில் இருந்து விழிப்பு வரும் நிலைக்கும் இடையில் தோன்றும் உள்ளுணர்வுக் காட்சியே கனவு என்கிறார்கள் மனித உடல் ஆராய்ச்சியாளர்கள்.

மிருகங்கள் கூடக் கனவு காண்கின்றன. ஒருவரது கடந்த கால அனுபவங்கள், தன்னையே அறியாமல் தனக்குள் அடங்கியிருக்கும் ஆசைகள், இவற்றின் உருவகக்காட்சியே கனவாகும். சிலருக்கு எதிர் காலத்தைக் காட்டும் கண்ணாடியாகக் கூடக் கனவுகள் அமைகின்றன. நமது புராண, இதிகாசக் கதைகளில் கூடக் கனவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. புகழ் பெற்ற கணித மேதைகள், விஞ்ஞான மேதைகள், உலகப் பெரும் சீர்திருத்த வாதிகள் பலர் தங்களது புகழுக்கு தாங்கள் கண்ட கனவுகளே காரணம் என்று கூறியிருக்கிறார்கள்.

கனவு காணும் வேளையில் மூளையின் வலது பகுதி இடது பக்கத்தின் ஆதிக்கத்தில் இருப்பதில்லை. அதன் விளைவின் உணர்வுகளே கனவுகளாகின்றன. இக் கனவுகள் காட்சிகள். அப்பப்பா! விந்தை தான். மனிதரின் குணங்களைப் பொறுத்துக் கனவுகள் மாறுபடும். உள்ளம் ஆரோக்கியமாக இருக்க நாங்கள் தினமும் கனவு காண வேண்டும் என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். தூக்கத்தில் 28வீதம் கனவு காண்பதில் செலவழிகிறது. கனவுகள் எப்படித் தோன்றுகின்றன என்று அறிந்தால் கனவை உற்பத்தி செய்தே பல உளவியல் நோய்களைத் தீர்க்கலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

# முரசு

ஊருக்கு நல்லது சொல்வேன்- எனக்
குண்மை, தெரிந்தது சொல்வேன்;
சீருக்கெல்லாம் முதலாகும்- ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்.
சாதிக் கொடுமைகள் வேண்டாம்- அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்- தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.
பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்- புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சில மூடர்- நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்.
தெய்வம் பலபல சொல்லிப்- பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய்- எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்.
யாரும் பணிந்திடும் தெய்வம்-பொருள்
யாவிலும் நின்றிடுந் தெய்வம்;
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று- இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.
அம்பென்று கொட்டு முரசே- மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்-இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்.



-சர்மிளா விவேகானந்தன்-



## அன்னை மொழி

குருவி ஒன்று மரத்திலே, கூடு ஒன்றைக் கட்டியே,
அருமைக் குஞ்சு மூன்றையும், அதில் வளர்த்து வந்தது.
நித்தம் நித்தம் குருவியும், நீண்ட தூரம் சென்றிடும்,
கொத்தி வந்து இரைதனை, குஞ்சு தின்னக் கொடுத்திடும்.

இறைவன் தந்த இறகினால், எழுந்து பறக்கப் பழகுவீர்
இரையைத் தேடித் தின்னலாம், என்று குருவி சொன்னது.
நன்று நன்று நாங்களும், இன்றே பறக்கப் பழகுவோம்,
என்று கூறித் தாயுடன், இரண்டு குஞ்சு கிளம்பின.

ஒன்று மட்டும் சோம்பலாய், ஒடுக்கிக் கொண்டே உடலை,
அன்று கூட்டில் இருந்தது!, ஆபத்தொன்று வந்தது!
எங்கிருந்தோ வந்தனன், ஏறி ஒருவன் மரத்திலே,
அங்கிருந்த கூட்டினை, அடைய நெருங்கிச் சென்றனன்.

சிறகு இருந்தும் பறக்கவே, தெரிந்திடாமல் விழித்திடும்,
குருவிக் குஞ்சைப் பிடித்தனன், கொண்டு வீடு சென்றனன்.
குருவிக் குஞ்சு அவனது, கூட்டில் வாடலானது,
அருமை அன்னை உரைத்தது, அதனின் காதிலொலித்தது.

விஜயகாந்தன் விவேகானந்தன்
Berg.Gladbach

19.10.94ல் கேட்கப்பட்ட படத்திற்குக் கதை எழுதுங்களுக்குப் பலர் கதை எழுதியிருந்தார்கள். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள். கீழே எழுதியிருக்கும் கதை அவற்றில் சிறந்ததாகத் தேர்தெடுக்கப் பட்டிருக்கிறது.



## *கஞ்சன்* கணபதி

ஒரு ஊரில் கணபதி என்ற ஒருவன் இருந்தான். அவனைக் கஞ்சன் கணபதி என்றே அவ்வூர் மக்கள் அழைப்பர். அவன் யாருக்கும் ஒரு சதமேனும் கொடுக்க மாட்டான். பிச்சை கேட்டு யாராவது வந்தால்கூட தகாத வார்த்தைகளைச் சொல்லி, திட்டி விரட்டுவான். புதுச் செருப்பை வாங்கிக் காலில் அணிந்து கொண்டால் அது தேய்ந்து விடும் என்று, கையில் தூக்கிக்கொண்டு செல்லும் அவனைப் பார்த்து அவ்வூர் மக்கள் கேலி செய்வார்கள். மற்றவர்கள் கேலி செய்வார்கள். மற்றவர்கள் கேலி செய்வதையோ, தன்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பதையோ, அவன் பொருட்படுத்துவதே இல்லை.

கிழிந்த பழங்குடையொன்று எப்பொழுதும் அவன் கையில் இருக்கும். அதை ஒருபோதும் அவன் பாவித்ததேயில்லை. நல்ல வெய்யிலடித்தாலும் குடையை எடுத்து விரிக்க மாட்டான். கணபதி உடுத்த உடையைத் தவிர வேறு மாற்றுடை அணிந்ததை யாரும் கண்டதேயில்லை. உடையில் கிழிசல் ஏற்பட்டாலும் அதைத் தைத்து அணிவான். எங்காவது இலவசமாகச் சாப்பாடு கொடுத்தால் வயிறு புடைக்கச் சாப்பிடுவான்.

பக்கத்தில் உள்ள வயலொன்றில் கணபதி வேலை செய்து கொஞ்சம் கொஞ்சமாகச் சம்பாதித்து, ஏராளமாகப் பணம் சேமித்து வைத்திருந்தான். ஆனால் அப்பணத்தைத் தானும் உபயோகிக்காமல் மற்றவர்களுக்கும் கொடுக்காமல் ஒரு தகரப் பெட்டியுள் வைத்துப் பூட்டி, வீட்டில் வைத்தால் யாராவது திருடி விடுவார்களோ என்றெண்ணி, அருகிலுள்ள காட்டின் மத்தியில் புதைத்து வைத்தான்.

பணம் சேர்ந்ததும் அவனுக்கு கல்யாண ஆசை உண்டாயிற்று. ஆனால் அவனது கஞ்சத்தனத்தை அறிந்து அவனுக்கு யாரும் பெண் கொடுக்க முன் வரவில்லை. கணபதி தனிக்கட்டையாகவே காலங்கழிக்க வேண்டியதாயிற்று. தினம் தினம் சம்பாதிக்கின்ற பணத்தை ஏழை எளியவருக்கும் கொடாமல் தானும் அனுபவிக்காமல் இரவு வந்ததும் அந்தப் பணத்தை நிலத்துள் மறைத்து வைப்பதும் அவனுக்கு வழக்கமாயிற்று.

ஒரு நாள் பெருமழை பெய்தது. புயலடித்தது. அவன் குடியிருந்த வீட்டை வெள்ளம் அடித்துச் சென்றது. அப்பொழுதும் புதைத்து வைத்திருந்த பணம் தான் அவன் நினைவுக்கு வந்தது. மழையையோ, புயலையோ பொருட்படுத்தாமல் பணம் புதைத்து வைத்திருந்த இடத்திற்கு ஓடினான். அங்கே அவன் கண்ட காட்சி!! மரங்கள் எல்லாம் தாறுமாறாக முறிந்து விழுந்திருந்தன. ஒரே வெள்ளக் காடாக இருந்தது. அவனால் அதையுமே கண்டு பிடிக்க முடியவில்லை. பைத்தியம் பிடித்தவன் போல் இங்கும் அங்கும் ஓடினான். "ஐயோ, என் பணம் போய் விட்டதே" என்று கதறிக் கதறி அழுதான்.கவலையில் நோய்வாய்ப்பட்டு ஒருநாள் இறந்து போனான்.

**கஞ்சன் கணபதியின் நிலை யாருக்கும் வரக்கூடாது. எப்பொழுதும் நம்மிடம் இருப்பதை பிறருக்கும் கொடுத்து வாழ வேண்டும் என்பதை இக் கதை வலியுறுத்துகிறது.**

**செல்வி. ஜெய்பிரபா தியாகேஸ்வரன்**

Bochum.

◆ ஒருவரது சாதாரணச் **செலவு**கள் அவரது வருமானத்தில் பாதியளவு தான் இருக்க வேண்டும். பணக்காரராகி விட நினைத்தால் வருமானத்தில் மூன்றிலொரு பங்கு இருக்க வேண்டும்.

—பிரான்சிஸ் பேக்கன்—

◆ கூடிய வரையில் துன்பம் வராமல் தடுத்துக் கொள்வதும், தடுக்க முடியாத துன்பத்தைக் கூடிய வரையில் சகித்துக் கொள்வதுமே புத்திசாலித்தனமாகும்.

—ரஸ்கின்—



முல்லாவை மக்கள் மேதை என்று சொல்வது சில திடீர் மேதைகளுக்குப் பிடிக்கவில்லை. முல்லாவை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டும் என்று திட்டம் போட்டார்கள். முல்லாவை அழைத்து முரட்டுத்தனமான கேள்விகளைக் கேட்பதென்று முடிவு செய்தார்கள். அவர்களில் சிலர் முல்லாவிடம் சென்று தங்களது கூட்டத்திற்கு வந்து அறிவுரை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

திடீர் மேதைகளின் திட்டம் முல்லாவிற்குத் தெரியும். இருந்தும் அழைப்பை ஏற்றுக் கொண்டார். மறுநாள் முல்லா அவர்களின் கூட்டத்திற்குச் சென்றார். முல்லா பேச எழுந்து *நான் என்ன பேசப் போகின்றேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?* என்று கேட்டார். கூட்டத்தில் இருந்தவர்கள் தெரியாது என்று குரல் கொடுத்தனர்.

*நான் பேசப்போவதைத் தெரிந்து கொள்ளாத உங்களிடம் பேசிப் பயனில்லை* என்று சொல்லி விட்டு முல்லா கூட்டத்திலிருந்து வெளியேறத் தொடங்கினார். கூட்டத்தவர்கள் முல்லாவை மறித்து எங்களுக்குத் தெரியும் என்றனர். முல்லா திரும்பி வந்து *உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயத்தை நான் பேசுவது அழகல்ல! வீண்வேலை!* என்று சொல்லி விட்டு வெளியேறத் தொடங்கினார்.

இதைக் கண்ட கூட்டத்தவர்களில் சிலர் தெரியும் என்றும் சிலர் தெரியாது என்றும் கூச்சல் போட்டனர். முல்லா திரும்பி வந்து கூட்டத்தைப் பார்த்து தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள் என்று சொல்லி விட்டுக் கூட்டத்தை விட்டு வெளியேறினார். திடீர் மேதைகள் தாங்கள் அவமானப் பட்டதை நினைத்து ஆளையாள் பார்த்துக் கொண்டனர்.

(இன்னும் வரும்)

🌐 பைபிளின் பழைய ஏற்பாடு கீப்ரு மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டன.

🌐 வாழை மரம் அல்ல! அது ஒரு தாவரம்.

🌐 அரபு மொழி பேச்சு வழக்கில்தான் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. எழுத்து வழக்கு ஒன்றாகவே உள்ளது.

# மூளைக்கு வேலை

## யார் திருடன்?

மோகன் பாண்டியன் குமார் மூன்று பேரையும் நகை திருட்டுக்காகப் பொலிஸ் கைது செய்தது. திருடியவன் பாண்டியன் என்று மோகன் சொன்னான் தான் திருடவில்லை என்று பாண்டியன் சொன்னான். குமார் தானும் திருடவில்லை என்று சொன்னான்

இவர்களில் ஒருவர் சொல்வது மட்டுமே உண்மை. மற்ற இருவரும் பொய் சொல்கிறார்கள் என்பது பொலிசிற்குத் தெரியும். அப்படியாயின் நகையைத் திருடியது யாரென்று உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் 10.12.94 ற்குள் எமக்குத் தெரிவியுங்கள்.

- உலக சணல் உற்பத்தியில் 80 வீதம் பங்ளாதேஷ் நாட்டிலே உற்பத்தியாகின்றது.
- உலகின் அதிக வாக்காளர்கள் உள்ள நாடு இந்தியா ஆகும்.
- உலகின் எல்லா நாடுகளிலும் சனத்தொகை அதிகரித்து வருகின்றது. ஆனால் அயர்லாந்து நாடு மட்டும் விதிவிலக்கு. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தவர்களின் பாதியே இன்றைய சனத்தொகை ஆகும்.

> வேதத்தை மறந்தாலும் திரும்பக் கற்றுக் கொள்ளலாம்
> ஒழுக்கத்தை மறந்தால் மறந்ததுதான்
> -திருவள்ளுவர்-

# முல்லா கதைகள்

முல்லா அடிக்கடி அயல் நாட்டிற்குச் சென்று வருவது வழக்கம். ஒவ்வொரு முறையும் கழுதையுடன் செல்வார். கழுதையின் மீது வைக்கோல் நிரப்பிய கோணிப்பை இருக்கும். முல்லா அடிக்கடி சென்று வருவதால் சுங்க அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் அப்படி எதையும் முல்லாவிடம் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒருநாள் சுங்க அதிகாரிகள் முல்லாவைத் தடுத்து நிறுத்தினார்கள். நீங்கள் என்ன எடுத்துச் செல்கிறீர்கள்? எனக் கேட்டனர். அதற்கு முல்லா என்னைக் கடத்தல்காரன் என்று நீங்கள் சந்தேகிக்கின்றீர்கள். அது சரி! நான் ஒப்புக் கொள்கிறேன், எதைக் கடத்துகின்றேன் என்பதை நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொன்னார்.

கோணிப்பையிலிருந்த வைக்கோலைக் கீழே கொட்டி ஆராய்ந்தார்கள். எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. இப்படிப் பல தடவைகள் நடந்தன. எதையும் முல்லாவிடமிருந்து கண்டுபிடிக்க முடிய-வில்லை. ஆண்டுகள் சில சென்றன. முல்லாவை எல்லையில் சோதனை செய்த அதிகாரி ஓய்வு பெற்று



விட்டார். அவர் ஒருநாள் முல்லாவைக் கடை வீதியில் கண்டார்.

அவர் முல்லாவிடம் கடத்தியது எதுவென அறிய ஆவல் கொண்டார். முல்லாவிடம் சென்று நீங்கள் கடத்தியது எதுவென்று கேட்டார். இதைக் கேட்ட முல்லா நீங்கள் தற்போது எல்லையில் அதிகாரியாக இல்லை என்பது தெரியும், எனவே சொல்கிறேன் நான் கடத்தியது கழுதைதான்! இங்கு கழுதை மலிவு, அயல்நாட்டில் விலை அதிகம், கழுதையில் சென்ற நான் கழுதையில்லாமல் திரும்பி வந்ததைக் கண்டிருந்தால் எதைக் கடத்தினேன் என்று இப்ப சொல்ல வேண்டி வந்திருக்காதே! என்றார்.


அந்த ஓய்வு பெற்ற அதிகாரி இதைக் கேட்டதும் தனது தலையில் அடித்துக் கொண்டார்.

# ஓநாயும் முதலையும்

ஒருநாள் ஓநாய் ஒன்று ஆற்றங்கரை ஓரமாக வந்து கொண்டிருந்தது. அடுத்த கரையோரமாகப் பெரிய திராட்சைப் பழத் தோட்டத்தைக் கண்டது. ஆற்றைக் கடந்து போக அதனால் முடியவில்லை. இக்கரையில் இருந்து கொண்டே அக்கரையிலுள்ள திராட்சைப் பழத்தைப் பார்த்துப் பார்த்து மனதிற்குள் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

அந்த ஆற்றங்கரைக்கு ஒரு முதலை வாயைப் பிளந்தபடி வந்தது. முதலையைப் பார்த்து ஓநாய் வணக்கம் சொன்னது. முதலையும் பதில் வணக்கம் சொல்லிக் கொண்டது. ஓநாய் முதலையிடம் தன்னைப் பற்றிப் பெருமையாகக் கதை அளக்கத் தொடங்கியது.

ஓநாயின் வார்த்தைகளில் முதலை மயங்கியது. ஓநாயைத் தன் நண்பனாக ஏற்றுக் கொண்டது. முதலை தனது கதையில் மயங்கியது ஓநாய்க்கு மகிழ்ச்சியாக இருந்தது. இதுதான் சமயம் என்று அக்ரைக்குச் செல்ல வேண்டியதைச் சொன்னது. முதலையும் ஓநாயைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு அக்கரைக்குச் சென்றது.



அக்கரையில் இருந்த திராட்சைப் பழங்களை ஓநாய் ஆசை தீரத் தின்றது. ஓநாய் தின்று முடிந்ததும் முதலை ஓநாயைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தது. வரும் வழியில் ஓநாய்க்குக் குள்ளப் புத்தி ஒன்று வந்தது.

முதலை இறைச்சி நல்லதென்று சொல்கிறார்களே! ஏன் விடவேண்டும்? என்று முதலையின் முதுகைக் கடித்துப் பார்த்தது. ஓநாயின் புத்தியைக் கண்ட முதலைக்குக் கோபம் வந்தது.

ஓநாயை ஆற்றுக்குள் அமிழ்த்திக் கொன்றது.

உதவி செய்பவர் முதுகை உரசிப் பார்க்கக் கூடாது என்பார்கள். கடித்துப் பார்த்தால் நிலை என்னவாகும்? ஓநாயின் நிலைதான் ஏற்படும்..

ஆக்கம்: செல்வி. செல்வா கந்தவனம்
நோர்வே

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## சிந்திக்கத் தூண்டும் உண்மை

அலெக்சாண்டரின் மரண ஊர்வலம் நடை பெற்றது. சவப்பெட்டியில் அவருடைய உடலை வைத்துத் தளபதிகள் தூக்கிச் சென்றனர். பெட்டியிலிருந்து கைகள் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. அதைக் கவனித்த சிலர் தளபதிகளிடம் கூறினார்கள். "உலகத்தின் பல நாடுகளை வென்ற போதும், இறக்கும்போதும் எதையும் எடுத்துச் செல்லவில்லை. வெறும் கையோடு போனேன் என்பதை உலகம் தெரிந்து கொள்ளல் வேண்டும், ஆகவே தளபதிகளே நான் இறந்தால் கைகளை பெட்டியிலிருந்து வெளியே தெரியும்படி வையுங்கள் இதுவே எனது கடைசி விருப்பம்" என மகா அலெக்சாண்டர் தெரிவித்ததாகத் தளபதிகள் பதிலளித்தார்கள்.


-சமரன் விக்னேஸ்வரன்-
Olsberg

# ஔவையார்



மாரிவெண்கோவிடமும் உழவன் காரியிடமும் விடை பெற்றுக் கொண்ட ஔவையார் குமரிமுனையை நோக்கித் தனது யாத்திரையைத் தொடங்கினார். தோவாளை என்ற ஆற்றின் கரையோரமாக நடந்த ஔவையார் தாடகமலை என்ற மலையின் அடிவாரத்தில் உள்ள தாளக்குடிக் கிராமத்தை அடைந்தார். திடீரெனப் பெரிய மழை இடி, மின்னலுடன் பெய்தது. இதனால் ஔவையின் பயணம் தடைப் பட்டது.

பெரும் மழையில் நனைந்து விட்ட ஔவையார் சிறிது தூரத்தில் குடிசையை நோக்கி நடந்தார். நடுநடுங்கிக் கொண்டு வந்த ஔவையைக் கவனித்த பெண்ணொருத்தி ஓடி வந்து உள்ளே அழைத்துச் சென்றாள். குடிசையில் உள்ள





மறைவிடத்தில் நின்று தன் உடைகளைக் கழற்றி ஒளவையாரிடம் கொடுத்தாள். மறைவிடத்தில் இருந்தே ஒளவையைப் பார்த்து "பாட்டி, எனது உடையை உடுத்திக் கொண்டு நனைந்த உங்கள் ஆடைகளை காயப் போடுங்கள். உங்கள் ஆடை காய்ந்ததும் அதை உடுத்திக் கொண்டு என் உடையைத் தாருங்கள். நான் உடுத்திக் கொள்கிறேன், என்றாள்.

ஆடை உலர்ந்ததும் அதனை உடுத்திக் கொண்ட ஒளவை பெண்ணிடம் அவளது உடையைக் கொடுத்தார். அவளும் அவ்வுடையை உடுத்திக் கொண்டு வெளியே வந்தாள். முன்பின் அறியாத தனக்கு நல்ல மனத்துடன் உதவி செய்த பெண்ணிடம் ஒளவையாருக்கு மிகுந்த அன்பு ஏற்பட்டது. இளம் பெண்ணான அவள் தனித்தே வாழ்வதை அறிந்து கொண்டார். தாய் தந்தை இல்லாத அப் பெண்ணை அவளது அண்ணனும் மனைவியும் கொடுமைப் படுத்தியதால் தனித்தே வாழ்வதையும் அறிந்தார்.



ஏழையான அந்த இளம் பெண்ணிடம் ஔவைக்கு மிகுந்த இரக்கம் ஏற்பட்டது. மிகவும் கஷ்டப் பட்டு உழைத்து வாழும் நீ திக்கற்றவள் என்று நினைத்து விடாதே. உன் பெற்றோர் செய்ய வேண்டிய கடமைகளை நான் உனக்குச் செய்வேன். என்று அன்புடன் கூறி விடை பெற்றுக் கொண்டு அடுத்த ஊருக்குச் சென்றார். பெயரில்லாமல் இருந்த அவ்வூருக்கு அதியனூர் என்று பெயரிட்டு அவ்வூர் மக்களை மகிழ்வித்தார்.

மீண்டும் தன் பயணத்தைத் தொடர்ந்த ஔவையார் அழுது கொண்டிருந்த குறி சொல்லும் பெண்ணின் கவலையைக் கேட்டார். தங்களின் பலாமரக் கிளைகளை யாரோ வெட்டி விட்டதாகவும், வெகு தூரத்துக் கிராமத்துக்குச் சென்ற தன் கணவன் வந்து விட்டால் என்ன பதில் சொல்வது என்று கூறிக் கவலைப் பட்டாள். உன் கணவர் வருமுன் பலாமரக் கிளைகள் தழைத்து விடும் என்று ஔவையார் அவளுக்கு ஆறுதல் கூறினார். அவள் தன்னிடம் இருந்த தினைமாவை துணியில் வைத்துக் கட்டி ஔவையிடம் கொடுத்தாள்.

(இன்னும் வரும் இத்தொடர் E.V.S Publishers லிருந்து நன்றியுடன் பிரசுரமாகின்றது.)

A பிரிவு இரத்தம் உள்ளவர்களுக்குப் புற்று நோய் வரக்கூடிய வாய்ப்புகள் அதிகம்.

## நான் எழுத வந்த விஷயம் பாரதியாரைப் பற்றியது

சுப்பிரமணிய பாரதியார் தமிழ்நாட்டில் எட்டயபுரத்தில் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு புலவர். அவர் பிள்ளைகளுக்குப் புத்திமதி சொல்லுவார். பாப்பாப் பாட்டுக்களை எழுதி வைப்பார். கம்பீரமாக நடப்பார் அவர் தடித்த சட்டையும் தலைப்பாகையும் அணிந்திருப்பார். சிரித்துக் கதைப்பார். அவரின் அம்மாவின் பெயர் இலக்குமி அம்மாள், அப்பாவின் பெயர் சின்னச்சாமி ஐயர். அவர் பொய் சொல்லாமல் உண்மையே சொல்லுவார். அவர்தான் நல்ல புலவர்.

-சர்மிளா விவேகானந்தன்-
Berg.Gladbach



புதிர்க்கதைக்குச் சிலர் விடை எழுதியிருந்தார்கள். எழுதியிருந்த விடைகளுள் சிறந்த விடையை எழுதியவர் சிவகுமார் சிவசுப்பிரமணியம். இவருக்குரிய பரிசாகப் பொன் காய்க்கும் மரம் கிடைக்கிறது.

விடை:

முயல் தனக்குத் தடிமன் பிடித்திருப்பதாகக் கூறியது. சிங்கத்தால் முயலின் பதிலால் அதனைக் கொன்று தின்ன முடியவில்லை.

# ஆட்டுப்புலி காட்டுப்புலியானது

ஒரு சமயம் ஒரு பெண்புலி ஓர் ஆட்டுமந்தையைத் தாக்கியது. அப்போது அந்தப் புலி பூரண கர்ப்பமாக இருந்தது. ஆட்டுக் கூட்டத்தின் மீது பாய்ந்த வேகமும் அதிர்ச்சியும் காரணமாகப் புலி அங்கேயே குட்டி போட்டு விட்டு இறந்து விட்டது. ஆனால் குட்டி தப்பிப் பிழைத்து ஆடுகளோடு சேர்ந்து வாழ ஆரம்பித்தது. ஆடுகள் புல் மேயும்போது தானும் புல்லைச் சாப்பிட்டது. ஆடுகள் கத்தும் சத்தம் கேட்டு அப்படியே தானும் கத்தியது.

காலம் மாறியது. புலிக்குட்டியும் வளர்ந்து பெரிதானது. ஒரு நாள் வேறொரு புலி இதே ஆட்டுமந்தை மீது பாய்ந்தது. அப்போது அந்தக் காட்டுப் புலி புல்லைத் தின்று கொண்டிருந்த தன் இனத்தைப் பார்த்து ஆச்சரியப் பட்டது. ஆட்டுப்புலி காட்டுப்புலியைப் பார்த்ததும் ஆடுகளோடு சேர்ந்து ஓட ஆரம்பித்தது. காட்டுப்புலி அதனைத் துரத்திச் சென்று பிடித்துக் கொண்டது. ஆட்டுப்புலி "மேமே" என்று கத்தியது. காட்டுப்புலி தன் பிடியைத் தளர்த்தாமல் ஆட்டுப்புலியை அருகில் உள்ள குளக்கரைக்கு அழைத்துச் சென்றது.

குளத்துத் தண்ணீரில் அதன் உருவத்தைக் காட்டி "இதோ பார், என் உருவமும் உன் உருவமும் ஒரே மாதிரி இருக்கிறது. நீயும் என்னைப் போலவே ஒரு புலிதான்! இதோ, இப்போது இந்த மாமிசத்தைத் தின்" என்று சொல்லிக் கொண்டே ஒரு மாமிசத் துண்டை ஆட்டுப்புலியின் வாயில் வைத்துப் பலவந்தமாகத் திணித்தது. ஆரம்பத்தில் ஆட்டுப்புலி மாமிசத்தைத் தின்ன



மறுத்தது. தான் ஓர் ஆடு தான் என்று பிடிவாதமாகச் சாதித்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஆட்டுப்புலிக்கு மெல்ல மெல்ல இரத்தத்தின் சுவை தெரிய ஆரம்பித்தது. அதோடு விரைவில் அதனிடம் இயல்பாகவே மறைந்திருந்த புலியின் சுபாவம் தலையெடுக்க ஆரம்பித்தது. மாமிசத்தை விருப்பத்துடன் தின்னத் தொடங்கியது. அப்போது காட்டுப்புலி ஆட்டுப்புலியைப் பார்த்து "இப்போது நீயும் என்னைப் போலவே ஒரு புலிதான் என்பது தெரிகிறதா? நீயும் என்னைப் போல ஒரு புலிதான் என்பது தெரிந்து கொண்டாயல்லவா இனி என்னோடு காட்டுக்கு வந்துவிடு" என்று சொல்லித் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் விட்டது.

இந்தக் கதையிலிருந்து நாம் அறிந்து கொள்வது இனம் தன் இனத்தோடு தான் சேரும். எமக்கு எப்படித்தான் மாறுபட்ட வாழ்வு கிடைத்தாலும் அவை நிரந்தரமானவையல்ல என்பதை உணர்த்துகிறது.

முகுந்தன் மகேந்திரன்
Bergisch Gladbach

# வினா விடைப் போட்டி

1. கொலம்பஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

*இஸ்லாம். கத்தல். தானியம். வேலி*

2. உலகப் பிரசித்தி பெற்ற இந்த நினைவு மாளிகை வட இந்தியாவில் உள்ளது. அதன் பெயர் என்ன?

*தாய். மும்தாஜ். மனிதன். மழைக்காலம். எல்லை*

3. எந்த நாட்டில் மிகப் பெரிய புகையிரதப் பாதை உள்ளது?

*அச்சம். மென்மை. தெரிவு. ஊக்கம். காலம்*

4. பிரேசில் நாட்டில் பேசப்படும் மொழி என்ன?

*போர்வை. கர்மம். பத்து. துறவி. விக்கல். கீழ். சுந்தரம்*

5. தன் இனத்து மக்களுக்காகப் போராடி வெற்றி கண்டு, பின் நாட்டின் தலைவரான தென்னாபிரிக்கர் யார்?

*நெருப்பு. எல்லை. கசப்பு. நன்மை. மது. தண்ணீர். மாட்டேன். பலா*

6. கன்னியாகவே வாழ்ந்த இங்கிலாந்து அரசி யார்?

*முதலை, பந்தம், எல்லாம், செம்பு, எண்ணம், பல்லி, கசப்பு, பெருமை, சத்தம்*

இவற்றிற்கான விடைகளை 10.12.94 க்குப் பிந்தாமல் அனுப்பவும்.

◆ பாராட்டு இரண்டு பணிகளை மிகச் சிறப்பாகச் செய்யும். ஒன்று நல்லவர்களை மேலும் நல்லவர்களாக்கும். இரண்டாவது கெட்டவர்களை மேலும் கெட்டவர்களாக்கும்.

–ஜோன் ரே–

◆ கோயிலுக்குக் கிலோ தங்கம் அளிப்பதை விட, உங்களிடம் உள்ள ஒரு துளி இரக்கம் மேலானதாகும்!

–பல்கேரியப் பழமொழி–

◆ சுயமாக உங்களை எந்தப் புத்தகம் சிந்திக்கத் தூண்டுகிறதோ அது சிறந்த புத்தகமாகும்.

–கிறிஸ்தோபர் மார்லி–

◆ ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தனி மனிதனும் தன் தரத்தை விருத்தி கொள்ளும் விதத்தில் கண்டிப்பாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

–தலாய் லாமா–

# வினாவிடைப் போட்டி முடிவு

1. பூமிப்பரப்பில் அதிகமாக உள்ள உலோகம் எது?

அதிரசம், எலும்பு, மின்சாரம், கனி, பயம், சமயம் (அலுமினியம்)

2. சூரியக்குடும்பத்தில் உள்ள எந்தக் கோள் அதிக பிரகாசமானது?

வெண்ணிலா, பள்ளி, சனி (வெள்ளி)

3. மிகக்கூடுதலான ஒஸ்கார் விருது பெற்றவர் யார்?

வானம்பாடி, பல்லி, ஆட்டம், காற்றாடி, அவுஸ்ரேலியா, பனி (வால்ட்டிஸ்னி)

4. ஐரோப்பாவிலுள்ள ஒரு நாட்டில் மாறுபட்ட மூன்று மொழிகள் பேசப்படுகிறது, அந்த நாட்டின் பெயரென்ன?

காசு, விதை, கஷ்டம், சந்தை, கர்மம், துலாபாரம், பந்து, காது (சுவிஸ்சர்லாந்து)

5. இலங்கையில் உள்ள நதிகளுள் பெரியது என்ன?

மந்திரி, விவகாரம், கவசம், வலிமை (மகாவலி)

6. திருக்குறளை இயற்றியவர் யார்?

ஊர்தி, பருவம், வண்டி, பள்ளம், தள்ளு, அவர்கள், வேர் (திருவள்ளுவர்)

7. ஐக்கிய ராச்சியம் என்று அழைக்கப்படும் நாடு எது?

இதழ், சங்கம், கிழவன், பலா, சந்தை, பந்து (இங்கிலாந்து)

<u>எழுதியவர்கள்:</u>

சமரி சிவருட்ணராஜா Olsberg
மஞ்சுளா சிவசம்பு Lohmar
கௌரியன் சிவானந்தராஜா Elsdorf
அனுலா இராசகோபால் Schönbach
ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
மோகன் இரத்தினசபாபதி Eschelbronn
காந்தரூபன் சத்தியமூர்த்தி Apen
தனுஜன் மகேந்திரன் Meerbusch
கௌரியன் குலேந்திரன் Dusseldorf
முகுந்தன் மகேந்திரன் Berg,Gladbach
தர்மினி கந்தசாமி Gladbech
சிவதர்சினி சிவராஜா Duisburg
சிவாஸ்கர் சிவராஜா Duisburg
அஜந்தன் அருளானந்தன் Remscheid
E.M.Rajah Munster
தாருண்யா தம்பிப்பிள்ளை Berlin
சிவகுமார் சிவசுப்பிரமணியம் Selm
வித்யா சிவசுப்பிரமணியம் Selm
லாவண்யா பாலேந்திரன் Meerbusch
ஜெய்பிரபா தியாகேஸ்வரன் Bochum
றேகா தியாகேஸ்வரன் Bochum
அஜந்தன் அருளானந்தசிவம் Remscheid

# சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

| | | | | |
|---|---|---|---|---|
| இ – வ | | | | |
| புரு | விண் | தம்பம் | வதந்தி | புல் |
| புருவம் | விண்வெளி | பம் | தந்தி | |
| வணிகம் | வெளி | கடு | பசு | |
| கம் | குரு | கடுகு | குள்ளம் | |
| அதி | குருதி | குளவி | திண்ணம் | |
| வதனம் | குருதிசை | அமரம் | வீணை | |
| தனம் | திசை | மரம் | கவி | |
| குரு | காப்பு | உண் | விண் | |
| குருவி | கரு | காகிதம் | விண்வெளி | |
| சந்தி | கருணை | தம் | வெளி | |
| கை | வளம் | கதை | குரு | |
| கைதி | மகி | தை | குருதி | |
| திதி | பவி | வெப்பம் | குருதிசை | |
| திண்ணை | விரி | செம்பு | காப்பு | |
| திவவு | விரிவு | செம்புளி | கரு | |
| கரகம் | பரதம் | புளி | கருணை | |
| கம் | தம் | புவி | வளம் | |
| வசதி | அரண் | புவியியல் | மகி | |
| சதி | அரண்மனை | மே – கீ | விரி | |
| திருட்டு | மனை | புன்னகை | விரிவு | |
| சதை | தினகரன் | கை | பரதம் | |
| வதந்தி | கரன் | விடை | தம் | |
| தந்தி | கரை | கரகம் | அரண் | |
| பசு | புல் | கம் | அரண்மனை | |
| குள்ளம் | விரு | வசதி | மனை | |
| திண்ணம் | பணம் | சதி | தினகரன் | |
| வீணை | யானை | திருட்டு | கரன் | |
| கவி | கதம்பம் | சதை | கரை | |

எழுதியவர்கள்:

ஜனார்த்தினி குணரத்தினம் Enneppettal
சமரி சிவரட்ணராஜா Olsberg
றேகா தியாகேஸ்வரன் Bochum
ஜெய்பிரபா தியாகேஸ்வரன் Bochum
மோகன் இரத்தினசபாபதி Eschelbronn
ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
மஞ்சுளா சிவசம்போ Lohmar
E.M.Rajah Münster
கிறிசாந் மனோறஞ்சிதராஜா Münster
காந்தரூபன் சத்தியமூர்த்தி Apen
சுதர் சிறீஸ்கந்தராஜா Duisburg
சுவேதா சிறீஸ்கந்தராஜா Duisburg
கௌரியன் சிவானந்தராஜா Elsdorf
லாவண்ஜா பாலேந்திரன் Meerbusch
விஜயகாந்தன் விவேகானந்தன் Berg.Gladbach
கௌரியன் குலேந்திரன் Düsseldorf
தனுஜன் மகேந்திரன் Meerbusch
அஜந்தன் அருளானந்தசிவம் Remscheid
S.விஜயரூபன் Faaborg (Denemark)
முகுந்தன் மகேந்திரன் Berg.Gladbach
சிவாஸ்கர் சிவராசா Duisburg
சிவதர்சினி சிவராசா Duisburg
தர்மினி கந்தசாமி Gladbeck
சிவகுமார் சிவசுப்பிரமணியம் Selm
வித்யா சிவசுப்பிரமணியம் Selm
தாருண்யா தம்பிப்பிள்ளை Berlin

# இயற்கைக் குணம்

துறவி ஒருவர் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தார். தண்ணீரில் தேள் ஒன்று விழுந்து தத்தளித்துக் கொண்டிருப்பதை அவர் கண்டார். தண்ணீருக்குள் கைவிட்டு தேளைத் தூக்கினார். துறவி தன்னைக் காப்பாற்றுகிறார் என்ற எண்ணமின்றி நறுக்கென்று தேள் துறவியின் கையில் கொட்டி விட்டது. வேதனையில் துடிதுடித்துத் தேளைத் தண்ணீருக்குள்ளேயே விட்டார். மறுபடியும் கருணையோடு தூக்கினார். மறுபடியும் கொட்டியது. எத்தனை முறை முயன்றாலும் அதே கதை தான்.

கரையில் நின்று கொண்டிருந்த ஒருவர் "சுவாமி, தேள் கொட்டுகின்றதே. திரும்பத் திரும்ப ஏன் தேளினால் கொட்டப் படுகின்றீர்கள்? விட்டு விட வேண்டியது தானே" என்றார். துறவி அவரைப் பார்த்து "கொட்டுவது தேளின் இயற்கைக்



குணம். காப்பாற்றுவது மனிதனின் இயற்கைக் குணம். அதனுடைய இயற்கையை அது விடாதபோது என்னுடைய இயற்கையை நான் ஏன் விடவேண்டும்?

ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையில் ஒரு தர்மம் இருக்கிறது. அதை அவன் விட முடியாது. விடக் கூடாது. உதாரணமாக குடிமக்களைக் காப்பது அரசன் கடமை. நல்ல பிள்ளைகளை உருவாக்குவது பெற்றோர் ஆசிரியர் கடமை.

"கல்கியிலிருந்து"
நர்த்தனன்

ooo ஆழ்கடலில் வாழும் கடற்குதிரை இனத்தில் ஆண் கடற்குதிரைதான் முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கிறது. இதைப் போல கடலில் வாழும் (mystus) மெஸ்ரஸ் என்னும் மீன் இனமொன்று பெண்மீன்கள் இடும் முட்டைகளைத் தன் அடிவயிற்றிலுள்ள மடிப்புக்குள் வைத்து அடை காத்துப் பொரிக்க வைப்பது மட்டுமல்ல! மடியில் இருந்து சுரந்து வரும் திரவப் பொருளை உணவாகக் கொடுக்கிறது.

*நீங்கள் எங்களுக்குப் பணம் அனுப்பியிருந்தால் எங்களுக்குத் தொலைபேசி மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தெரிவியுங்கள்.*


சிறுவர் அமுதம்
ஈழம்
எங்கள்
நாடென்போம்!
இதற்கு
ஏது
ஈடென்போம் ?
— சின்ன இராஜேஸ்வரன்
Siruvar Amutham
Im Winkel.2
50189 Elsdorf
Tel.02271/66527
Konto 1146023746
Bankleitzahl: 37050299